<u>குற்றவியல் நீதித்துறை நடுவர், விரைவு நீதிமன்றம், ஓமலூர்</u>
முன்னிலை: திருமதி.S.சர்மிளா, B.A.B.L.(Hons.), L.L.M.
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
**விரைவு நீதிமன்றம் (மு**.கூ.பொ.)
ஓமலூர்.
எஸ்.டி.சி. 25/2022

2024 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் **17** ஆம் தேதி புதன் கிழமை புகார்தாரரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டின் 54-வது விதியின் 9-வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு. ஆர். சதீஸ்குமார், உதவியாளர் என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : தேவராஜ் | வயது | : |
| த/பெ | : நாராயணசாமி | தொழில்: | |
| ஊர் | : | | |
| வட்டம் | : ஓமலூர் | ஜாதி | : |
| மாவட்டம் | : சேலம் | தேதி | : 17.**04.2024** |

விசாரணை தொடங்கிய நேரம் - மதியம் 12.00 மணி.

<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி :</u>

1. எதிரி என்னிடம் இருந்து கடன் பெற்ற தேதிக்கு 3 மாதத்திற்கு முன்பு என் வீட்டிற்கு வந்திருந்தார். எதிரி என்னுடைய வீட்டிற்கு வரும்போது எனக்கு போன் செய்து வழி கேட்டு தான் வந்தார். நான் புகாரில் குறிப்பிட்டுள்ள விலாசத்தில் தான் எனது ஆதார் அடையாள அட்டை, குடும்ப அட்டை, முதலமைச்சர் காப்பீட்டு திட்ட அடையாள அட்டை ஆகியவை உள்ளது என்றால் சரி. எனக்கு திருமணம் ஆகிவிட்டது. எனது மனைவி வேலைக்கு செல்ல வில்லை என்றால் சரி. எனது குடும்ப அட்டை அரிசி கார்டு என்றால் சரி. வெள்ளை அட்டை அல்ல என்றால் சரி.

2. முதலமைச்சர் காப்பீடு திட்டம் தொடர்பான அட்டை ரூ.1,00,000/- கீழ் வருடாந்திர வருமானம் பெறும் நபருக்குதான் கொடுக்கப்படும் என்றாலும் அதை பெற்றுள்ள நான் எனது ஆண்டு வருமானம் ரூ.6,00,000/- மேல் என்று கூறுவது பொய் என்றால் சரியல்ல. எனது ஆண்டு வருமானம் ரூ.6,00,000/- க்கு மேல் என்று பிரமாண வாக்குமூலம் மூலம் கிராம நிர்வாக அதிகாரியிடம் குறிப்பிட்டு குடும்ப அட்டை, முதலமைச்சர் காப்பீட்டு திட்ட அடையாள அட்டை பெற்றேன் என்றால் சரியல்ல. எதிரிக்கு கடன் கொடுக்கும் அளவிற்கு பண வசதி இல்லை என்றாலும் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

3. வழக்கு காசோலையில் உள்ள விபரங்களை எனது நண்பர் பிரேம் குமார் என்பவர் நிரப்பினார். (சாட்சி மீண்டும் கேள்வியை மறுபடியும் எதிரி தரப்பு வழக்கறிஞரிடம் கூறும்படி கேட்ட பின்பு காசோலையில் உள்ள விபரங்களை எதிரி நிரப்பியதாக கூறுகிறார்). எதிரி காசோலையில் தனது கையொப்பத்தை மட்டும் செய்திருந்தாரா அல்லது முத்திரை பதித்திருந்தாரா என்றால் கையொப்பம் செய்து அவரது நிறுவனத்தின் முத்திரையை பதித்திருந்தார். மேற்படி முத்திரையில் எதிரி உரிமையாளர் என்று குறிப்பிடப்பட்டிருந்ததா அல்லது பங்குதாரர் என்று குறிப்பிடப்பட்டிருந்ததா என்றால் சரிவர தெரியவில்லை.

4. யோகேஷ் நிறுவனம் என்பது பங்குதாரர் நிறுவனமா அல்லது தனிமனிதன் உரிமையாளர் நிறுவனமா என்று எனக்கு தெரியாது. நான் எதிரிக்கு பகுதி நேர ஓட்டுநராக வேலை செய்த போது எதிரியின் கணவர் வாகனத்தில் வைத்திருந்த முத்திரை மற்றும் கையொப்பம் மட்டும் செய்து பூர்த்தி செய்யப்படாத காசோலையை திருடி எதிரி மீது பொய்வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரியின் வீட்டு விலாசத்திற்கு இவ்வழக்கு சம்பந்தப்பட்ட அறிவிப்பை அனுப்பினால் என் மீது சட்டரீதியாக நடவடிக்கை அனுப்பப்படும் என்று தெரிந்தே எதிரியின் தாயார் வீட்டுக்கு அறிவிப்பை அனுப்பியுள்ளேன் என்றால் சரியல்ல.

5. இவ்வழக்கு அறிவிப்பை எதிரிக்கு முறையாக சார்பு செய்யப்படாத காரணத்தால் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. எதிரி என்னிடம் கடன் பெறவில்லை என்றாலும் காசோலை கொடுக்கவில்லை என்றாலும் எதிரி மீது பொய்வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றாலும் சரியல்ல.. எதிரிக்கு நான் கொடுத்ததாக சொல்லும் கடனிற்கு வட்டி பெறவில்லை என்றால் சரி. வட்டி இல்லாமல் அதிகம் அறிமுகம் இல்லாத நபருக்கு கடன் கொடுத்திருப்பதாக கூறுவது ஏற்கத்தக்கது அல்ல என்றால் எதிரி ஒரு மாதத்தில் வட்டி தருவதாக கூறினார், ஆனால் தரவில்லை. எவ்வித மூகாந்திரமும் இல்லாமல் எதிரிமீது வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

விசாரணை முடிந்த நேரம் - மதியம் 12.20 மணி.